# துவள விடாத துவரை



80 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரம் வரைக்கும் துவரை சாகுபடியில வருமானம் பார்க்கலாம் என்கிறார் 25 வருடங்களாகத் தொடர்ந்து துவரைப் பயிர் செய்வதை மேற்கொண்டிருக்கும் சண்முகம் அவர்கள்.
திண்டுக்கல் மாவட்டம், கொடை ரோடு அருகில் உள்ள தாசதாணிக் கோட்டையைச் சேர்ந்தவர் தான் இந்த சண்முகம் **(அலைபேசி : 98425 09479).** துவரைக்கு செம்மண் நிலமாக இருந்தா ரொம்ப நல்லது. வடிகால் வசதியிருந்தா வண்டல் மண் நிலத்துலயும் போடலாம். ஆடி, புரட்டாசி ரெண்டு பட்டத்துலயும் விதைக்கலாம். குறுக்கு, நெடுக்கா உழவு போட்டுட்டு, ஆறு லோடு எரு போட்டு, திரும்பவும் ஒரு உழவு போடணும். விதைக்கிறப்ப செடிக்கு செடி ஒன்றரை அடி வரிசைக்கு வரிசை ஒணரு அடி இடைவெளி இருக்கறாப்ல வெச்சி ரெண்டு விதைகளை நடணும். இப்படி நட்டா, ஏக்கருக்கு எட்டு கிலோ விதை தேவைப்படும். நடவு செஞ்ச கையோட உசுரு தண்ணி பாய்ச்சணும். அடுத்த தண்ணி ஏக்கருக்கு 2 மூட்டை டிஏபி போட்டுட்டு, அதுக்குப் பிறகு தான் பாய்ச்சணும். மண்ணோட தன்மையைப் பொருத்தும், காலநிலையைப் பொருத்தும் 7 நாள்ல இருந்து 10 நாளைக்கு ஒரு தண்ணி கட்டினாலே போதும்.

மொட்டு விட்டுக் காய் பிடிக்கிற சமயத்துல, தண்ணி தேங்க விடாமப் பாத்துக்கணும். வெடி வளர வளர களையும் தலையெடுக்கும். 45 நாளைக்கொரு முறைன்னு மொத்தம் மூணு முறை களையெடுக்க வேண்டியிருக்கும். பூ வைக்கிற சமயத்துல மறுபடியும் தேவைப்படும். இந்தத் தடவை கரைசலா தெளிக்கணும். நாலு கிலோ டிஏபி உரத்தை மொத்த நாள் ராத்திரியே தண்ணியில ஊற வெக்கணும். மறுநாள் சாயங்காலம் தெளிஞ்சி இருக்குற கரைசலை மட்டும் எடுத்துத் தெளிக்கணும். இதே போல 15 நாள் கழிச்சி மறுபடியும் கரைசலைத் தெளிக்கணும். புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்தறது ரொம்ப முக்கியம். பூச்சித்தாக்கின பாகத்தை முதல்ல பிடுங்கி எடுத்திட்டு, ஏக்கருக்கு 200 மில்லி பூச்சி மருந்தை தெளிச்சிக் கட்டுப்படுத்தலாம் மலட்டு நோய் தான் அதிகமாத் தாக்கும். காய் முதிர்ந்ததும் செடிங்களை அடியோட வெட்டி எடுத்திடணும். அப்படியே கொண்டு வந்து நட்டாம நிறுத்தி வெச்சி, காய விடணும். நல்லாக் காய்ஞ்சதும்

அடிப்பாகத்தைக் கையில பிடிச்சிக்கிட்டு, செடியை தரையில அடிக்கணும். காயும், தூசியுமா துவரை கிடைக்கும். இதை சுத்தம் செஞ்சி, துவரையை தனியா எடுத்து காய வெச்சி விக்கலாம். இறவையில் ஏக்கருக்கு 650 கிலோ வரைக்கும் மகசூல் கிடைக்கும். கிலோ 30 ரூபாய்ன்னு விலைப் போகும். செலவெல்லாம் போக எட்டாயிரத்துக்கும் பக்கமா கையில நிக்கும்.

இது ஆறு மாசப் பயிர் ஆறு மாசத்துல குறைந்த பராமரிப்புல இந்த அளவுக்கு லாபம் தரக்கூடிய பயிரா இருக்குறதால தான் 25 வருஷமா இதையே நான் விடாமப் பயிர் பண்றேன். முக்கியமான அமினோ அமிலங்களும் இதில் அடங்கியுள்ளன. துவரையின் இலையும், காயின் மேல்தோலும் (துவரம் பொட்டு) கால்நடைகளுக்கு நல்லத் தீவனமாகப் பயன்படுத்தலாம். துவரைக் குச்சிகளை எரிபொருளாக பயன்படுத்தலாம். பட்டங்களுக்கு ஏற்ற துவரை இரகம், ஒவ்வொரு இரகத்தை எந்தெந்த இடைவெளிகளில் நடவு செய்யவேண்டும்.